**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 31/2025**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருமதி. சுபாஷினி** | **Caste** | : | |
| **Husband's Name** | : | **திரு. இளஞ்செழியன்** | **Calling** | : | |
| **Village** | : | **மேட்டுப்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **48** |
| | | | **Dated** | : | **30.07.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**Accused present.**

அ.சா. 1 (பட்டியல் சாட்சி 1), **திருமதி. சுபாஷினி** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து துணி வியாபாரம் வேலை செய்து வருகிறேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு நான் என் விட்டில் இருந்த பொழுது, என் வீட்டின் அருகில் இருந்தவர்கள் எனது உறவினரை கத்தியால் யாரோ குத்திக் கொண்டு இருந்ததாக சொன்னார்கள். நான் போய் பார்த்தபோது அங்கு என் மாமா நீலகண்டன் குத்துப்பட்டு கிடந்தார். அவருக்கு நெஞ்சிலும், முதுகிலும், இடது மணிக்கட்டிலும் உட்பட மொத்தம் 11 இடங்களில் இரத்த காயம் ஏற்பட்டு இருந்தது. நான் அவரை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சையில் சேர்த்தேன். அவர் மயக்க நிலையில் இருந்ததால், அங்கு வந்த போலீசார் என்னை விசாரித்தனர். நான் நீதிமன்றத்தில் சொன்ன இந்த விபரங்களை அவர்களிடமும் சொன்னேன். புகார்

மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் Ex. P1 ஆகும். அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. எதிரியை நான் சம்பவம் நடந்த அன்று, சம்பவ இடத்தில் பார்த்தேன். அப்போது அவர் இரண்டு கத்தியுடன் அங்கு நின்று கொண்டு இருந்தார். இந்த வழக்கு சம்மந்தமாக எனது மாமா நீலகண்டன் மற்றும் அவரது மனைவி கலாராணி என்பவருக்கும் வழக்கு நடந்து கொண்டு இருந்தது தெரியும். எதிரி எனது மாமா நீலகண்டனின் மகன். அவர்களுக்குள் போனில் சண்டை போட்டுக் கொள்வார்கள். சம்பவத்தன்று எதிரி ஏன் அங்கு வந்தார் என்று தெரியாது. இது சம்மந்தமாக வேறு ஒன்றும் எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் இரண்டு கத்திகளும், சம்பவதன்று எதிரி அவர் கையில் வைத்து இருந்த கத்திகள் தான். அவை முறையே MO. 1 and MO. 2. போலீசார் என்னை விசாரித்தனர்.

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

போலீசார் என்னை விசாரித்தனர் என்றும், போலீசார் விசாரணையில் எனது இரண்டாவது கணவர் நீலகண்டன் மற்றும் எனது முதல் கணவருக்கு பிறந்த மகன் ஷரயாஸ் மற்றும் எனது இரண்டாவது கணவருக்கு பிறந்த குருதேவ் மற்றும் எனது அம்மா இந்துராணி ஆகியோருடன் குடியிருந்து வருகிறேன் என்றும், எனது இரண்டாவது கணவர் நீலகண்டனுக்கும், நொஞ்சி ஓடைப்பட்டியைச் சார்ந்த கலாராணி என்பவருக்கும் திருமணமாகி அவர்களுக்கும், விஸ்வநாத் என்ற மகனும், கனிமொழி, காயத்திரி என் இரு மகள்களும் உள்ளார்கள் என்றும்,

இருவரும் குடும்ப பிரச்சனை காரணமாக நீலகண்டன் மனைவி கலாராணி மீது விவகாரத்து வழக்கு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது என்றும், கலாராணி நீலகண்டனிடம் ஜீவனாம்சம் கேட்டு வழக்கு தொடுத்துள்ளார் என்றும், இதனால் நீலகண்டனுக்கும், கலாராணிக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டது என்றும், இந்த நிலையில் 22.05.2024ம் தேதி மாலை என் கணவர் நீலகண்டனுக்கு அவரது முதல் மனைவி மகன் விஸ்வநாத் போன் செய்து, எனது அம்மா கலாராணியுடன் நீ வாழவில்லை என்றும், நீ வேறு ஒருத்தியுடன் குடும்பமாக வாழ்கிறாய் என்றும் பேசினார்என்றும், அதன் பின் 23.05.2024ம் தேதி காலை என் கணவர் நீலகண்டன் வேலைக்கு சென்றுவிட்டு மாலை 05.30 மணி அளவில் நான் வீட்டில் இருந்தபோது, என் செல்போனிற்கு எனது மகன் ஷரயாஸ் எனக்கு போன் செய்து, என் கணவர் நீலகண்டன் வேலையை முடித்து அவரது TN 57 BP 9471 என்ற இருசக்கர வாகனத்தில் அக்னி லிங்கேஸ்ரவரர் கோவில் அருகே வரும்போது, அங்கு இருந்த விஸ்வநாத் என் கணவரை வழிமறித்து என் கணவரை தகாத வார்த்தைகளால் பேசி அவர் மறைத்து வைத்து இருந்த இரண்டு கத்தியை எடுத்து, என் கணவரைப் பார்த்து இத்துடன் செத்து தொலைடா என்று தீண்ட தகாத வார்த்தைகளால் பேசி எனது கணவரை மாறி மாறி குத்தினார் என்றும், அந்த வழியாக வந்த எனது மகன் அதனை பார்த்து தகவல் சொன்னார் என்றும், உடனே நான் சம்பவ இடத்திற்கு சென்று எனது கணவரை பார்த்தபோது, அவருக்கு இடது மார்பு, இடது பக்க வயிறு, வலது பக்க இடுப்பு, இடது தோள்பட்டை, வலது பக்க முதுகு, இடது பக்க கழுத்திற்கு கீழ், வலது கன்னம், வலது கை மணிக்கட்டு ஆகிய இடங்களில் இரத்த காயம்பட்டு கிடந்தவரை, நானும், அருகில் இருந்தவர்களும் சேர்ந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சேர்த்தோம் என்றும்,

அங்கு என் கணவர் சிகிசையில் இருக்கும் போது விசாரிக்க வந்த தாலுகா போலீசாரிடம் என் கணவர் மயக்க நிலையில் இருந்ததால் நான் எதிரி மீது நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்தேன் என்று, போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அரசு தரப்பிற்கு எதிரிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

போலீசார் விசாரணையில் நான் எதிரியிடம் இரண்டு கத்திகளின் அடையாளம் பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். இரண்டு கத்திகள் வைத்து இருந்ததாக சொல்லி இருக்கிறேன். சம்பவத்திற்கு முன்பு எதிரிக்கும், நீலகண்டனுக்கும் உள்ள பிரச்சனைகள் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

R V RAJA KUMAR

Digitally signed by R V RAJA KUMAR
Date: 2025.07.30 18:17:03 +0530